# தமிழ்ச்சிட்டு

குரல்: 1.

இசை: 8.




தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்



# உங்கள் மடல்கள்

O சிட்டாய் வந்து சிறுநகை சிந்தி
மொட்டாய் உளத்தில் முகிழ்த்தனை வாழி!
கட்டொன் றழியாக் கவின்மிகு தமிழைப்
பிட்டுத் தருமோர் அருட்கை நீயே!
நீட்டிய பயணம் நெகிழா திருக்க
ஆட்டும் தலைவன் அருளினை வேண்டுவேன்!

-பூ. பொற்கயற்கன்னி–9ஆம் வகுப்பு. சோறப்பட்டு, கண்டமங்கலம்.

O முன்னொரு காலத்தில் உலகளாவியிருந்த தமிழ் இன்று ஓரிரு கோடி மக்கள் அளவில் குறுகி விட்டதை அறியும்பொழுது மனம் மழுங்குகின்றது. குறுகிவிட்ட செந்தமிழை உலகளாவி வளம் பெற்றுத் திகழச் செய்ய 'தென்மொழியும்' 'தமிழ்ச்சிட்டும்' செய்துவரும் பெரும்பணி தமிழுக்கும் தமிழர்க்கும் செய்யும் ஒரு தலையாய பணி!

–கு. சுவாமிநாதன், இராசாமால்குட்டலலி, பெங்களூர்-3

O தமிழர்க்குத் தங்கள் தாய்மொழிமேலேயே இருக்கும் மயக்கத்தையும் வெறுப்பையும் நீக்கப் பல ஆண்டுகள் கழித்து இன்று பிறந்தன 'தென்மொழியும்' 'தமிழ்ச்சிட்டும்'. இவை புல்லியருக்குக் கல்லறை! மறவர்க்குக் கேடயம்; மாணவர்களுக்குப் பட்டயம்.

–சி. பூ. மணி. சீராம்புரம். பெங்களூர்-21.

O ...ஒருநாள் எங்கள் வகுப்பு ஆசிரியர் தமிழ்ச்சிட்டைப் படித்துக் காண்பித்தார். அவர் படிக்கப் படிக்க என்னுடைய மனதில் இருளுக்கு வெளிச்சத்தைக் கொடுப்பதைப் போல் இருந்தது...எங்களை ஆளாக்கிய பெருமை தங்களுக்கே சேரும்!

–வெ.மு. பால்ராசு. வள்ளலார் கல்வி நிலையம், அரியலூர், திருச்சி.

O 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' இதழ்களைத் தவறாது நானும் எனது நண்பர்கள் பலரும் படித்து மகிழ்கின்றோம். அவற்றில் வரும் பாடல்களும் கட்டுரைகளும் எங்கள் மனப்போக்கை அடியோடு மாற்றியமைத்து விட்டன. உண்மைக்கும் போலிக்கும் இடையே உள்ள வேற்றுமையினைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. உங்கள் தொண்டு–உண்மைத் தொண்டு! உயர்ந்த தொண்டு! நீடுழி வளர்க!

–சுப. சுப்பையா, 2/7, முதல் வீதி, பி. அளகாபுரி, கீழ்ச்சிவற்பட்டி.

O எந்நிலையிலும் நெறிபிறழாது நெஞ்சுறுதியுடன் கருத்தைப் பரப்புங்கள்! தங்களைப் புரக்க நாங்கள் உளோம். தமிழ்த்தொண்டே இறைப் பணியாம்.

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலைஇதழ்


இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!


குரல்–1 | தி. பி. ௧௯௯௮ பங்குனி (மீனம்) மார்ச்சு | இசை–8


## திருவாளர்கள்
# ‘ஏதோ’வும், ‘சும்மா’வும்.

அருமைத் தம்பி, தங்கைகளே! உங்களுக்குத் திருவாளர்கள் ‘ஏதோ’ ‘சும்மா’ என்ற இருவரைப் பற்றித் தெரியுமா? அவர்கள் வேறு யாருமிலர். நம்மிடையே நெருங்கி வாழ்ந்து கொண்டிருக்கின்ற பலர்தாம். அவர்கள் வேறு வேறு அழகிய பெயர்களை வைத்துக் கொண்டிருந்தாலும், அழகு–அழகான உடைகளை உடுத்துக் கொண்டிருந்தாலும், அவர்களின உண்மைப் பெயர்கள் மட்டும் திருவாளர் ‘ஏதோ’ திருவாளர் ‘சும்மா’ என்பவைதாம். அவர்களைப் பற்றி நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள். ஆனால், சொன்னால் அறிந்து கொள்வீர்கள். அப்படி அறிந்து கொண்டவுடன் நீங்கள் அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அவர்கள் உங்கள் வாழ்க்கையைக் கெடுத்து விடுவார்கள். அப்படிப் பட்டவர்கள் உங்கள் உறவினராயிருந்தாலும், நண்பர்களாயிருந்தாலும் அவர்களை விட்டு விலகி விடுவதுதான் நல்லது.


பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்
உறுப்பாசிரியர்:– இறைக்குருவன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1

முதலில் திருவாளர் 'ஏதோ' என்பவரைப்பற்றி உங்களுக்குச் சொல்கின்றேன். இவர் எப்பொழுதும் கவலையான முகத்துடனேயே இருப்பார். யாருடனும நெருங்கிப் பழகமாட்டார். அடிக்கடி சலித்துக் கொள்வார். எதையும் நன்ருக அறிந்து கொள்ள விரும்பமாட்டார். கொஞ்சம் தெரிந்து கொண்டாலே போதும் என்றிருப்பார். எந்த ஒருவேலையையும் விருப்பமாகச் செய்ய மாட்டார். ஏதோ ஒன்றைப் பறிகொடுத்தவர் போலவே வாழ்க்கையில் பிடிப்பில்லாமல் இருப்பார். சிறுபருவத்திலிந்தே இவர் சுறுசுறுப்பு அற்றவராகவே வாழ்ந்து வருவார். காலையில் படுக்கையை விட்டு எழவே இவருக்கு மனம் வராது. தூங்கவும் மாட்டார்; வெறுமனே படுக்கையில் புரண்டு கொண்டே இருப்பார். இல்லை யென்ருல் விழித்துக் கொண்டே அசைவற்றுக் கிடப்பார். நாற்காலியில் நேராக அமர மாட்டார். கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு 'ஏதோ கப்பல் கவிழ்ந்து போனவர் போல் அசைவற்று இருப்பார். சாப்பிடுகையிலும் மெதுவாக அசைபோட்டு அசைபோட்டு, ஒவ்வொரு சோருக மென்று மென்று, விழுங்க முடியாமல் விழுங்குவார்.

காலையில் எழுந்தது முதல் படுக்கைக்குப் போகும் வரையில் எந்த வேலையிலும் இவர் சரியான ஈடுபாடாக இருக்கமாட்டார். இப்படிப்பட்டவர்தாம் திருவாளர் 'ஏதோ!' அவரைப் பார்த்து, எப்படி ஐயா, இருக்கின்றீர்கள்? என்ருல், புன்சிரிப்புச் சிரித்தபடி '... ம் ... ஏதோ இருக்கின்றேன்' என்பார். 'என்ன படிக்கின்றீர்கள்?' என்ருல், 'ஏதோ பொழுதுபோகவில்லை என்பதற்காகப் படிக்கின்றேன்' என்று சொல்லி நமுட்டல் சிரிப்பாகச் சிரித்து மழுப்புவார். 'வாழ்க்கை எப்படி?' என்ருல் 'ஏதோ, இருக்கின்றது' என்று சொல்வார். 'திரைப்படம் பார்த்தீர்களே எப்படி இருந்தது?' என்று கேட்டாலும் கூட, 'ஏதோ இருந்தது' என்பாரே தவிர, கதையைப் பற்றியோ பாட்டைப் பற்றியோ பாராட்டியோ தாழ்த்தியோ ஒன்றும் பேசமாட்டார். இப்படிப் பட்டவரிடம் நீங்கள் எந்தக் கேள்வியைக் கேட்டாலும் சரி 'ஏதோ இருக்கிறது; நடக்கிறது; போகிறது; வருகிறது' என்றுதான் விடை வரும். இவர் இறந்து போகின்ற நிலையில் கூட 'ஐயா, உடம்பு எப்படி இருக்கின்றது?' என்ருல், 'ஏதோ, பண்ணுகிறது' என்பாரே தவிர, இன்னது செய்கிறது என்று தெளிவாகச் சொல்ல மாட்டார். இவர் இறந்த பின்புகூட இவர் உறவினர்களேயோ, நண்பர்களேயோ இவரைப் பற்றிக் கேட்டால் அவர்களும் அவரைப்பற்றிச் சரியாக எதுவும் சொல்லாமல் 'ஏதோ வாழ்ந்தார்; போனுர்' என்பார்கள். இப்படி 'ஏதோ' பிறந்து, 'ஏதோ' வாழ்ந்து, 'ஏதோ' இறந்து போகின்றவர்தாம் திருவாளர் 'ஏதோ'.

இன்னெருவர் திருவாளர் 'சும்மா'. இவர் 'ஏதோ' வைப் போல் இல்லாமல் மிகவும் சுறுசுறுப்பானவர். விரைவில் படுக்கையை விட்டு எழுவார். காலைக்கடன்களே முடிப்பார். உணவை அள்ளி

அள்ளி விழுங்குவார். பரக்க பரக்க உடை உடுப்பார். துண்டை உதறித் தோள் மேல் போட்டுக்கொண்டு செருப்பைப் போட்டவாறு சரக்குப் புரக்கு என்று விரைவாக நடந்து போவார். சிலநேரம் இங்கு மங்கும் 'குட்டிபோட்ட பூனை' போலப் போவதும் வருவதுமாக இருப்பார். ஆனால்உருப்படியாக எதையும் அறிந்துகொள்ள மாட்டார். ஆனால் எல்லாவற்றையும் தெரிந்தவர் போல நடிப்பார். பேச்சுக் கொடுத்தாலோ அதில் ஒன்றும் இருக்காது.

இவரிடம் ஏதாவது கேட்டாலோ, 'சும்மா' என்ற சொல்லைப் போட்டே மழுப்புவார். 'இங்கே இப்படி மிகத்தொலைவாக வந்து விட்டீர்கள்' என்று நாம் அவரிடம் கேட்டால் 'சும்மா, இப்படி வந்தேன் !' என்று உடனடியாக விடை சொல்வார். 'என்ன, பெரிய வீடாகக் கட்டி விட்டீர்களே?' என்றால் 'சும்மா, இப்படிக் கட்டினேன்' என்பார். 'பையன், என்ன செய்கிறான்? அல்லது என்ன படிக்கிறான்' என்றாலோ, 'சும்மாதான் இருக்கிறான்' அல்லது 'சும்மா, பள்ளிக் கூடம் போகவர இருக்கிறான்' என்று சொல்வார். இவரிடம் நீங்கள் அடிக்கடி 'சும்மா' பேச்சைக் கேட்கலாம். இவர் ஒரு பொழுது கொல்லி. பேச்சுக் கொடுத்தால் இல்லாததும் பொல்லாததுமாகப் படிபடியாக அளப்பார். முடிவானபயன் 'சும்மா' தான். இப்படிப்பட்ட 'சும்மா'க்கள் சிறுவர்களாக இருந்தாலும் அப்படியேதான் இருப்பார்கள் 'என்'டா என்னடா, படிச்சிருக்கே' என்றால், 'சும்மா' படிச்சிருக்கேன்'டா' என்றுதான் அந்தச் 'சும்மா'ச் சிறுவன் விடை சொல்லுவான்.

சிறுவர்களே ! இப்பொழுது உங்களுக்குத் திருவாளர் 'ஏதோ'வையும், திருவாளர் 'சும்மா'வையும் யார் யார் என்று தெரிந்திருக்கும். அப்படிப்பட்ட 'ஏதோ'வும் 'சும்மா'வும் உங்களில் பலர் இருப்பார்கள். ஒருவேளை 'ஏதோ' என்பவர் உங்கள் தந்தையாகவும், 'சும்மா' என்பவர் உங்கள் அண்ணனாகவும் கூட இருந்து விடலாம். அல்லது உங்களுக்கே 'ஏதோ' 'சும்மா' என்ற இருவர் நண்பர்களாக இருப்பார்கள். அவர்களை இனிமேல் நீங்கள் 'ஏதோ' அல்லது 'சும்மா' என்றே கூப்பிடுங்கள். அவர்களிடம் நெருங்கிப் பழகி விடாதீர்கள்; அவர்களின் நடைமுறைகளைப் பின்பற்றி விடாதீர்கள். அவர்கள் பேச்சுக்கு உங்கள் காதுகளைக் கொடுத்து விடாதீர்கள். அவர்களால் யாருக்கும் பயனிருக்காது. அப்படிப் பயன் இருந்தாலும் ஒரு மூட்டை உமியில் ஒரு பிடி அரிசிபோலத்தான் பயனும இருக்கும். ஒருவேளை நீங்களே அந்த 'ஏதோ' அல்லது 'சும்மா' என்ற இருவரில் ஒருவராக இருந்து விட்டால், நீங்கள் கட்டாயம் உங்களை மாற்றிக் கொள்ள வேண்டியதுதான். இல்லையென்றால் உங்களால் பிறர்க்குக் கேடுதான். உங்கள் நெஞ்சின்மீது கையை வைத்து உண்மையாகச் சொல்லுங்கள். நீங்கள் யார்? 'ஏதோ'வா? அல்லது 'சும்மா'வா ?




## வியட்நாம் போர்நிறுத்த மாநாடு.

வியட்நாம் போரை நிறுத்தி உலக அமைதியை ஏற்படுத்து வதற்கு வருகின்ற சூலைமாதத்தில் இலண்டனில் உள்ள இசுடாக்கோம் நகரில் ஒரு மாநாடு நடக்கப் போகின்றது. உலக அமைதிக்காகப் பாடுபடும் பலநாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் எல்லாரும் மாநாட்டை நடத்துவார்கள்.

## பிழையாகப் பேசுவோரைத் திருத்தும் கருவி.

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா உளவியல் பேராசிரியர்கள் ஒரு கருவியைக் கண்டு பிடித்துள்ளனர். அக்கருவியைக் குரல்வளை யில் பொருத்திக் கொண்டால் நாம் பேசுகின்ற பொழுது இடை யிடையே வரும் தேவையில்லாத முனகல்கள், ஊங்கார ஆங்கார ஒலிகள், திக்கல்கள் முதலியன நேராமல் பேச்சு தங்கு தடை யின்றி வருமாம். பெரும்பாலும் மேடைப் பேச்சாளர்கள் பிழை யின்றிப் பேசுதற்கு இக்கருவி பெருந்துணை செய்யுமாம்.

## ஒருகாசு செலவில்லாமல் வெற்றி!

அண்மையில் நடந்த பொதுத் தேர்தலில் குசராத்தில் தசு என்ற மாவட்டத்தில் குமித் என்பவர் போட்டியிட்டார். அவருக்கு மிதி வண்டி அடையாளம் தரப்பட்டது. எனவே அவர் நண்பர்கள் அவருக்கு ஒரு மிதிவண்டியை வாங்கிக் கொடுத்திருந்தனர். அவர் அம் மிதிவண்டியிலேறி அவ்வூரில் உள்ள ஒவ்வொரு குடிசைக்கும் சென்று ஒப்போலை (வாக்கு) கேட்டார். அவரை எதிர்த்த இருவரும் பெரும் பணக்காரர்கள். அவர்கள் தேர்தலுக்காக ஏராளமாகச் செலவு செய்தார்கள். குமித் விளம்பரம் ஏதுமின்றித் தன் மிதிவண்டியை வைத்துக் கொண்டே மக்களை நேரிடையாகக் கண்டு தனக்குத் துணையாக ஒப்போலை தருமாறு கேட்டார். முடிவில் வென்றவர் அவரே! அவரின் ஆடம்பரமற்ற தன்மைக்கே மக்கள் கைகொடுத்து வெற்றிபெறச் செய்தனர்.

## மாணவர்கள் அற மன்றம்!

காசி இந்துப் பல்கலைக்கழகத்தில் இந்த பிப்ரவரி மாதம் மாண வர்களே இருந்து அறங்கூறும் மன்றம் அமைக்கப் பட்டிருக்கின்றது. இதுபோன்ற மன்றம் இந்தியாவில் வேறு எந்தப் பல்கலைக் கழகத் திலும் இல்லை. கல்லூரியில் மாணவர்களிடை நடக்கும் ஒழுங்கின்மை கட்டுப்பாடின்மை முதலியவற்றைச் சார்ந்த வழக்குகளை அவர்களே வழக்காடித் தீர்த்துக் கொள்வார்கள்.




# சேவல்

துரை-மாணிக்கம்.

காலையிலே கண் விழிப்பாய்
சேவலே! – நீ
கதிரவனை நின்றழைப்பாய்
சேவலே!

வேலை யிதோ எந்தநாளும்
சேவலே? – நீ
வேறு வேலை என்ன செய்வாய்
சேவலே ?

குப்பை மேட்டில் ஏறி நின்று
சேவலே! – நீ
கொக்கரக்கோ கொக்கரக்கோ
என்கிறாய்!

செப்பு வதற் கென்ன பொருள்
சேவலே ! – வந்து
சேர்ந்த இன்பம் என்ன கண்டாய்
சேவலே!

அரும் பரும்பாய் அழகு மிக்கக்
கொண்டையும் – கூர்
ஆணி போல வன்மை சேர்ந்த
மூக்கையும்,

திரும்பு கையில் ஆடுகின்ற
தாடியும்–எங்குத்
தேடிப் பெற்றாய் என்று சொல்வாய்
சேவலே!




## 7 ஐங்குறு நூறு

எட்டுத்தொகை நூல்களுள் ஐங்குறுநூறும் ஒன்றாகும். இதன்கண் ஐந்நூறு பாடல்கள் உள்ளன. இந்நூல் மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை எனும் ஐந்திணையைப் பற்றியும் நூறு நூறு அகவற்பாக்களால் ஆகிய தொகையாகும். திணை என்பது ஒவ்வொரு நிலத்துக்கும் உரியதாகக் கற்பித்துக் கூறும் ஆடவர் பெண்டிர் ஒழுக்கம்.

ஐங்குறு நூற்றில் உள்ள பாடல்கள் மூன்று அடிகளுக்குக் குறையாமலும் ஆறு அடிகளுக்கு மிகாமலும் காணப்படுகின்றன. இப்படி ஐந்திணைகளுக்கும் குறைந்த அடிகளை அளவாகப் பெற்றுள்ளமையால் இந்நூல் ஐங்குறுநூறு எனப் பெயர் பெற்றது. இதுவும் நற்றிணை, குறுந்தொகைகளைப் போலவே அகத்துறை என்னும் காதலைப் பற்றியதே யாகும்.

இந்நூலில் 129, 130 ஆம் செய்யுட்கள் காணப்படவில்லை. 416, 490 ஆம் செய்யுட்களின் இரண்டாம் அடிகள் சிதைந்து காணப்படுகின்றன.

இதனைத் தொகுத்தவர் கூடலூர் கிழார் என்னும் அறிவுநிறைந்த புலவராவர். தொகுக்கச் செய்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையார் ஆவர். இச்செய்திகள் நூலின் இறுதியில் குறிக்கப் பெற்றுள்ளன.

இந்நூலில் மருதத்திணையை ஓரம்போகியார் என்பவரும், நெய்தல் திணையை அம்மூவனார் என்பவரும். குறிஞ்சித்திணையைக் கபிலரும், பாலைத்திணையை ஓதலாந்தையார் என்பவரும், முல்லைத் திணையைப் பேயனார் என்பவரும் பாடியுள்ளனர்.

இறந்துபட்ட மறவர்களின் நினைவாக நடுகல் நட்டு அக்கல்லில் அந்த மறவரைப் பற்றிய குறிப்பு எழுதல் பற்றி ஒரு பாடல் தெரிவிக்கின்றது. இன்னும் திருமணத்துக்குப் பரிசப்பொருள் கொடுப்பது, வேற்றுநாடு சென்று வாணிகம் செய்வது முதலிய செய்திகள் குறிப்பிடத்தக்கனவாக இந்நூலில் காணப்படுகின்றன.

சொல்நயம், பொருள்நயம் மிகுந்த இந்நூலும் ஏனைய கழக நூல்களைப் போலவே தமிழின் ஆழ்ந்தகன்ற வளத்தையும் இனிமையையும் நுகர விரும்புபவர் கற்பதற்குரியதாகும்.



# குட்டிக்கதை

## உண்மை அறிந்தே ஒழுகுக !

உதயை மு. வீரையன்.

ஒருநாள் மங்கலபுரியை ஆண்ட மாமன்னன் தனக்கு அடங்காத காவர்லி நாட்டு மன்னன் மீது படையெடுத்துப் போர் தொடுத்தான். வெற்றியும் பெற்று வாகை சூடினான்.

இதனால் மாமன்னனை அமைச்சர்களும், புலவர்களும் நல்வரவு கூறி அரியணையில் அமர்த்தினர். தத்தம் மகிழ்ச்சியையும் அன்பையும் தெரிவித்துக் கொள்ளும் வகையில் ஒவ்வொருவரும் ஒவ்வோர் எலுமிச்சம்பழத்தை அரசனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்து வணக்கம் கூறினர்.

இதனை நாடு போற்றும் நகைச்சுவை மன்னன் தெனாலிராமன் கண்டான். உடனே அவனும் எல்லாரையும் போலவே தானும் ஒரு பொருளை எடுத்து அரசனிடம் கொடுத்து வணங்கினான். மாமன்னன் தெனாலிராமன் தந்த பொருளை வாங்கிப் பார்க்க, அஃது ஒரு புளியம் பழமாக இருந்தது !

அவையில் இருந்தவர்கள் எல்லாருமே 'கொல்' என்று சிரித்து விட்டனர். வெற்றிக் களிப்பிலே வீற்றிருந்த அரசனுக்கு அது வெட்கத்தை உண்டாக்கி விட்டது. சினம் மீறிய அவன், ''இவனைத் தூக்கிலிடச் சிறையில் அடையுங்கள்'' என்றான்.

மறுநாள் அவை கூடிற்று. மன்னன் குற்றவாளியாகிய தெனாலிராமனைப் பார்த்து, ''நீ குற்றவாளி தானே?...'' என்றுகேட்டான்.

''அரசே, எல்லாரும் எலுமிச்சம் பழம் தந்தார்கள். புளியம்பழம் அதை விட உருவில் நீட்சி; புளிப்பிலும் மிகுதி; இதைக் கொடுத்ததில் என்ன தவறு?...'' என்றான் தெனாலிராமன்.

அரசன் பேசவில்லை. தெனாலிராமன், "அரசே! எல்லாரும் எலுமிச்சம்பழம் கொடுத்ததற்குக் காரணம் சொல்லச் சொல்லுங்கள்...'' என்றான்.

சிலர், 'பொன்னிறமாக இருக்கிறது' என்றனர்; சிலர் 'அழகாக இருக்கிறது' என்றனர். சிலர் 'பித்தத்தைப் போக்கும்', என்றனர்; வேறுசிலர் "மதிப்புக்காக' என்றனர்.

தெனுலிராமன் அனைத்தையும் மறுக்கவே, அரசன், "நீயே கூறு" என ஆணையிட்டான்.

"அவையோரே!மாம்பழம் சாப்பிட்டிருக்கிறீர்களா? அஃது இனிப்பானது; மாங்காய் புளிப்பானது; மாவடு துவர்ப்பானது. இப்படியே ஒவ்வொன்றும் பிஞ்சு, காய், பழம் என்னும் நிலையில் வெவ்வேறு சுவையாக இருக்கும். ஆனால் எலுமிச்சம் பழமோ பிஞ்சு, காய், பழம் ஆகிய எந்த நிலையிலும் ஒரே புளிப்புச் சுவையோடுதான் இருக்கும்; அத்துடன் அதன் மணம் உடல் நலத்துக்கு ஏற்றது; அவ்வாறே எக்காலத்தும் தங்களிடம் என்றும் மணமும், குணமும் மாருமல் இருப்பேன் என்பதற்கு அடையாளமாகத்தான் எலுமிச்சம் பழத்தைக் கொண்டுவந்து கொடுப்பது வழக்கம்;...........இந்த உண்மையை உணராமல், அதன்படி நடக்க நினைக்காமல் எலுமிச்சம் பழத்தை மட்டும் கொடுத்து விட்டுப் போவதால் என்ன பயன்? இந்த உண்மையை எல்லாரும் அறிந்து நடக்க வேண்டும் என்பதற்காகவே நான் புளியம்பழத்தைக் கொண்டுவந்து கொடுத்தேன். அடியேனை மன்னிக்க வேண்டும்" என்ருன் தெனுலிராமன்.

அவனுடைய அறிவாற்றலை அறிந்த மன்னன் அவனைப் பாராட்டி விடுதலை செய்து பரிசும் தந்தான். இதனுல் உண்மை அறிந்தே ஒழுகுதல் வேண்டும் என்பது தெரிகின்ற தன்ருே? 0

## முட்டை !

—இரா. உதியன், புதுவை-7.

ஒன்றில் ஒன்றைக் கழித்திட்டால்
உடனே நான்தான் தோன்றிடுவேன்!
நன்ரு யெழுதா மாணவர்க்கு
நான்தான் மதிப்பெண் ஆகிடுவேன்!
என்றும் என்னை உலகுக்கே
எடுத்துக் காட்டாய்க் கூறிடுவார்!
நன்ருய் உணர்ந்து பார்த்தாயா?
நான்யார்? முட்டை அறிந்தாயா?

0

# எங்கள் பெயர்களைத் தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றிக் கொண்டோம்.

:o:

('தமிழ்ச்சிட்டு' கேட்டுக் கொண்டபடி தமிழ்த்தம்பி தங்கைகள் பலரும் தங்கள் தங்கள் பிறமொழிப் பெயர்களைத் தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றிக் கொண்டதாக, அறிவித்திருக்கின்றார்கள். அவர்களின் பெயர்களைத் 'தமிழ்ச்சிட்டு' தொடர்ந்து இப்பக்கத்தில் பாடிக் காட்டும். அன்பும், அறமும், கல்வியும், வளமும் நிரம்பிய நல்ல குடிமக்களாகவும் தொண்டர்களாகவும் இனி வருங்காலத்தில் வளர்ந்து சிறக்கும்படி 'தமிழ்ச்சிட்டு' அவர்களை வாழ்த்துகின்றது. இடமின்மையால் அவர்களின் முழு முகவரிகளையும் தாமுடியாமைக்கு வருந்துகின்றோம். - ஆசிரியர்.)

| எண். | முன்னையபெயர். | மாற்றியபெயர். | ஊர் பெயர் | மாற்றத்திற்கு உதவியவர். |
|---|---|---|---|---|
| 1 | கு. தங்கராசு | கு. பொன்னி வளவன் | திருத்துறைப் பூண்டி | திரு. வி.பொ. பழனி வேலன், தமிழாசிரியர். |
| 2 | சந்திரசேகரன் | வில்லவன்கோதை | நம்பியூர். | - தானே. |
| 3 | ந. சி. தண்டபாணி. | ந. சி. இளங்கீரன். | பேரங்கியூர். | பள்ளித் தமிழாசிரியர். |
| 4 | மனோகரன் | தூயவன் | சீராமபுரம் பெங்களூர்-2 | 'தமிழ்ச்சிட்டு' |
| 5 | இராசேந்திரன் | செங்குட்டுவன் | ,, | ,, |
| 6 | கமலா | தாமரை | ,, | ,, |
| 7 | வசந்தா | பொற்கொடி | ,, | ,, |
| 8 | பிரேமா | அன்பரசி | ,, | ,, |
| 9 | வனிதா | செந்தாழை | ,, | ,, |
| 10 | சரளா | பூங்குழல் | ,, | ,, |
| 11 | P. சோசப்ராசு | பா. வளன் அரசு | | பள்ளித்தலைமை ஆசிரியர். கிழவனேரி நெல்லைமா. வ. |
| 12 | பத்மநாபன் | இளமாறன் | | உரத்தநாடு தொல்காப்பியர் மன்றம், உரந்தை. |
| 13 | பாலசுப்பிரமணியன் | இளம்வழுதி. | ,, | ,, |
| 14 | சுப்பிரமணியன் | இளம்பரிதி | ,, | ,, |
| 15 | சண்முகம் | மணிவண்ணன் | ,, | ,, |
| 16 | சம்பந்தம் | இளஞ்செழியன் | ,, | ,, |

(வளரும்)




# நியூட்டன்

சோம. தேவராசன், அறி. இ.

தம்பி, தங்கைகளே!

இன்றைய உலகின் அறிவியல் முன்னேற்றங்களுக்கு அடித்தளம் அமைத்த அறிவியல் அறிஞர் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றை இப்போது உங்களுக்குச் சொல்லப் போகிறேன். உங்களில் பலர் முன்பே அவரைப்பற்றி அறிந்திருக்கலாம். அவர்தாம் நியூட்டன்.

1642 ஆம் ஆண்டில், கிறித்துமசு நாளில், இங்கிலாந்து நாட்டில் உல்சுதோர்ப் என்னும் சிற்றூரில் நியூட்டன் பிறந்தார். இளமையில் அவர் பள்ளிப்படிப்பில் அவ்வளவு கருத்துடையவராய் விளங்கவில்லை எனினும், பொறிகளின் அமைப்பைப் பற்றி வியக்கத்தக்க அறிவுடன் திகழ்ந்தார். சின்னஞ்சிறு கருவிகளும், அவரே செய்த பல்வேறு வகைப்பட்ட அரம்பங்களும் எப்போதும் அவருடனேயே இருந்தன. அவர் தாமே பல பொருள்களைச் செய்தார்; அதைக்கண்டு வியந்த அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் "நியூட்டன் பிற்காலத்தில் சிறந்த தொழில் வல்லுநன் ஆகிப் பொருள் சேர்ப்பான்" என்று கூறினார்கள்.

நியூட்டனுக்குக் கணிதத்தில் மிகவும் விருப்பம் இருந்தது. பலவகையாய வேடிக்கையான மணிப்பொறி (கடிகையாரங்)களை நியூட்டன் செய்தார். மணியடித்ததும் முகத்தட்டிலிருந்து (Dial - plate) பாவைகள் வெளியே வந்து நாட்டியமாடும் மணிப்பொறிகளை அமைத்தார்; மணிப்பொறியின் தண்டு (Pendulam) அசைவதற்கேற்ப அசையும் வகையில் அழகிய விளையாட்டுக் கப்பலை அமைத்தார். கப்பல் இங்கும் அங்கும் செல்வதுபோன்ற தோற்றம் எவ்வளவு அழகாயிருக்கும் என்பதை நீங்களே ஒருநொடியில் உங்கள் மனக்கண்ணில் எண்ணிப் பாருங்கள்! மணிப்பொறிகளை அமைப்பதில் நியூட்டனுக்கிருந்த வியக்கத்தக்க அறிவை, அவர் செய்த, அதுவரை மக்கள் கண்டிராத மணிப்பொறி "உள்ளங்கை நெல்லிக்கனி"யென வெளிப்

படுத்தியது. தண்ணீர் துளி துளியாக ஒரு கிண்ணத்திலிருந்து மற்றொரு கிண்ணத்தில் விழுவதைக் கொண்டு நேரத்தை அறியும் வகையில் நியூட்டன் செய்த மணிப்பொறிதான் அது. இதைக்கண்டு நேரத்தைச் சொல்வதே ஒருசிலரால்தான் இயலும். இத்துடன் நியூட்டன் "கதிர்த்தட்டு" (Sun dial) என்ற மற்றொரு வகை மணிப்பொறியையும் செய்தார். கதிரவன் ஒளி அதன்மேல் படுவதிலிருந்து இயங்கும் பொறி அது; உல்சுதோர்ப்பில் இன்னும் அப்பொறி இயங்கி வருவதை இன்றும் நீங்கள் அங்குச் சென்றால் காணலாம்;

காற்றின் வலிவை அறிய நியூட்டன் கடைப்பிடித்த வழிதான் எவ்வளவு எளிதானது! காற்றுப்போக்கின் எதிர்ப்புறத்தில் துள்ளிக் குதிப்பார் (Jumping) நியூட்டன்; தாண்டும் இடைவெளியின் நீள அளவைக்கொண்டு காற்றின் வலிவைக் கணக்கிட்டார் அவர். விளையாடுபொழுதுகூட நியூட்டனின் அறிவு வேலை செய்துகொண்டு தான் இருந்தது! தம் வீட்டுக்கருகில் அமைக்கப்பட்டிருந்த பெரிய காற்றாலை (Wlndmill) யைப் பார்த்துப் பார்த்து அதைப் போன்ற சிறிய காற்றாலை ஒன்றை நியூட்டன் செய்தார். நியூட்டனைத் தூண்டும் கருவியாயிருந்த பெரிய காற்றாலையின் உச்சியில் பெரிய காற்றாடி ஒன்று விரிந்த இறக்கைகளுடன் இருந்தது; காற்றடிக்கும் விரைவுக்கேற்பக் காற்றாடி சுற்றியது; அத்துடன் இணைக்கப்பட்டிருந்த உருளைகள் சுழன்றன; அங்கே உள்ள பெட்டியில் வைக்கப் படும் தவசங்கள் (கோதுமை, அரிசிபோன்றவை) இந்த இயக்கத்தால் மாவாக்கப்பட்டன. நியூட்டன் செய்த சிறிய காற்றாலையிலும் இந்த எல்லா இயக்கங்களும் இருந்தன. அரிசியை அதனுள் போட்டபோது, அது மாவாக்கப்பட்டதைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

பள்ளிப் படிப்பிலிருந்து சிலகாலம் நியூட்டன் தங்கி, வீட்டுவேலை களையும், பயிர்த்தொழிலையும் கவனிக்க நேரிட்டது. அவருடைய அறிவியல் மனம் அவற்றில் ஈடுபடவில்லை. மீண்டும் கேம்பிரிட்சு பல்கலைக்கழகத்தில் பள்ளிப்படிப்பு முழுவதும் முடிந்தபிறகு சேர்ந்தார்.

அறிவியல் உலகில் நியூட்டனின் கண்டுபிடிப்புகள் என்னென்ன தெரியுமா? ஒளியின் தன்மையை முதன் முதலில் அவர்தான் கண்டு பிடித்தார்; கதிரவனின் ஒளி எப்பொருள்களால் ஆனது என்பதை வெளியிட்டார்; புவி ஈர்ப்பு ஆற்றலை(சக்தி)க் கண்டு பிடித்தார்.

மாபெரும் அறிவியல் அறிஞராய்த் திகழ்ந்த நியூட்டன் சிறிய உயிரிகளிடம் கூட அன்புடையவர் என்பதைக் கீழ்வரும் நிகழ்ச்சி யிலிருந்து நீங்கள் அறியலாம்.

அப்போது நியூட்டனின் அகவை (வயது) ஐம்பது. ஒளியின் தன்மையைப்பற்றி இருபது ஆண்டுகளாக அவர் செய்த ஆய்வு முடிவுகள் எழுதப்பட்ட தாள்களைக் கட்டாகத் தன் மிசைப்பலகை(Table) யின்மேல் வைத்திருந்தார்; அவர் அன்புடன் வளர்த்த காழும் (Diamond) என்னும் நாய் அருகில் அமைக்கப்பட்டிருந்த கனப்பு அடுப்புக்குப் பக்கத்தில் படுத்திருந்தது. மிசைப்பலகை மேல் மெழுகுத்திரி ஒன்று எரிந்து கொண்டிருந்தது. நியூட்டன் அறையை விட்டு வெளியே சென்றிருந்தார்.

படுத்துக் கொண்டிருந்த நாய் மிசைப்பலகைமேல் துள்ளி ஏறியது; அப்போது எரிந்து கொண்டிருந்த மெழுகுத்திரி பக்கத்திலிருந்த ஆராய்ச்சித் தாள்களின் மேல் விழுந்தது. சிறிது நேரத்துக்குள். அவையெல்லாம் கருகிச் சாம்பலாகிவிட்டன. எரிந்து முடியும் நேரத்தில்தான், அறையின் கதவைத்திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார் நியூட்டன். அவர் எதிரில், அவருடைய இருபதாண்டு ஆராய்ச்சியும், உழைப்பும் சாம்பலாகிக் கிடந்தன. அப்போது நியூட்டனின் மனம் என்ன பாடுபட்டிருக்கும்! நினையுங்கள்! இவ்வளவுக்கும் காரணமான காழம் அங்கே நின்று கொண்டிருந்தது. வேறு ஒருவனுயிருந்திருந்தால், அங்கேயே அந்த நாயை அடித்துக் கொன்றிருப்பான். ஆனுல் நியூட்டன் காழத்தின் அருகில் சென்று அதைத் தடவிக்கொடுத்து, ''காழம்! நீசெய்த தவறு உனக்குத் தெரியாது!'' என்று அன்போடு சொன்னுர்.

அவருடைய ஆராய்ச்சி முடிபுகள் அழிந்து போனதில் அளவுகடந்த துயருற்றபோதும், சிறிய உயிரான அந்தநாய் அறியாமல் செய்த தவற்றைமன்னித்து அதனிடத்தும் அன்புபாராட்டிய அவரின்உயர்ந்த பண்புதான் என்னே! நியூட்டன் பெரும்புகழும், பெருஞ் செல்வமும் பெற்றபோதும், அடக்கமே உடையவராய், எளிய வாழ்வு நடத்தி, எல்லாரிடத்தும் அன்புடையவராய் இருந்து 1727 ஆம் ஆண்டில் மறைந்தார். ''தோன்றிற் புகழொடு தோன்றுக'' என்ற வள்ளுவரின் மொழிக்கேற்ப வாழ்ந்தவர் நியூட்டன்.

வருங்காலச் செல்வங்களே ! நீங்கள் ஒவ்வொருவரும் நியூட்டனைப் போல் அறிவியல் அறிஞராக முயலுங்கள் ! புதிய உண்மைகளைக் கண்டுபிடிக்க முயலுங்கள் ! முயன்ருல் முடியாதது ஒன்றும் இல்லை !

"முயற்சி திருவினை யாக்கும்''

## மதி நுட்பம்

மா. பூங்குன்றன்

அக்பர் அரசவையில் அமைச்சர் பலர் இருந்தனர். அவர்களில் 'பீர்பால்' என்ற அமைச்சர் மிகவும் அறிவாளி. அவர் அரசரிடமிருந்து நிறைய பரிசுகளைப் பெற்றிருந்தார். இதனால் மற்றவர்கள் இவர்மேல் பொறாமை கொண்டனர் அதைப் பீர்பாலும் அறிவார். ஆனாலும் நேரடியாக அவர்களிடம் இதுபற்றி ஒன்றும் சொல்லிக் கொள்ளாமல் இருந்தார். என்றாலும் அவர்களுக்குச் சரியானபடி பாடம் கற்பிக்க பீர்பால் நினைத்துக் கொண்டிருந்தார். அதற்கான வாய்ப்பும் வந்தது.

ஒருநாள் அக்பர் பீர்பாலைப் பார்த்துப் ''பீர்பால், என் உள்ளங்கையில் முடியே இல்லையே! ஏன்?'' என்று கேட்டார். அதற்குப் பீர்பால் ''நீங்கள் கொடைவள்ளல்; எனவே கொடுத்துக் கொடுத்துத் தங்களின் உள்ளங்கையில் முடி தேய்ந்து விட்டது'' என்றார். உடனே அரசர், பீர்பாலனே! உம் கைகளிலும் முடியே இல்லையே ஏன்?'' என்று கேட்டார். அதற்குப் பீர்பால், ''நீங்கள் கொடுப்பதை வாங்கி வாங்கி என் உள்ளங்கைகளில் உள்ள முடியும் தேய்ந்துவிட்டது'' என்றார்.

உடனே அருகிலமர்ந்திருந்த அமைச்சர்கள் எழுந்து பீர்பாலை நோக்கி, ''எங்களுக்கும் உள்ளங்கையில் முடியில்லையே ஏன்?" என்று கேட்டனர். அதற்குப் பீர்பால் சிறிதும் தயங்காது, "அன்பர்களே! நீங்களெல்லாம் அரசர் எனக்குப் பரிசு கொடுக்கும் பொழுது பொறாமையோடு கைகளைப் பிசைந்து கொள்கிறீர்கள். அதனால்தான் உங்கள் முடியும் தேய்ந்து விட்டது" என்று கூறினர். அமைச்சர்களுக்கு நாணம் ஏற்பட்டு விட்டது. அரசரும் அமைச்சர்களின் பொறாமையை உணர்ந்து அவர்களின் அறியாமையை அவர்களுக்கு விளக்கினர். O

---

* தமிழில் ஏறக்குறைய ஓர் இலக்கம் சொற்களுக்கு மேல் உள்ளன என்று அறிஞர் கணக்கிட்டுள்ளனர். ஆனால் சிற்றூர்ப்புறங்களில் இப்பொழுது வழக்கிலிருந்து மறைந்துவரும் சொற்களையெல்லாம் ஒன்றுவிடாமல் திரட்டினால் இவ்வெண்ணிக்கை ஏறத்தாழ 2மடங்குக்கு மேல் இருக்கும்.

* பொந்து என்றால் தொளை. தொளையுள்ள மரம் போந்து (பனை) பனை ஓலைக்குப் போந்தகம் என்று பெயர். அதனால் பனையோலைகளால் செய்யப்பெற்ற சுவடிக்கு பொத்தகம் என்று பெயர்வந்தது. அதுவே பின்னர் தாள்களால் ஆன சுவடிக்கும் பெயரானது.

# நினைவில் வைக்க வேண்டிய சில பழமொழிகள்.

* அடுத்த வீட்டுக்காரனுக்கு அதிகாரம் வந்தால், அண்டைவீட்டுக் காரனுக்கு இரைச்சல் மிச்சம்.
* அடங்கா மாட்டுக்கு அரசன் மூங்கில் தடி.
* அரைத்து அரைத்து மீந்தது அம்மி;
  சிரைத்துச் சிரைத்து மீந்தது குடுமி!
* அரைப்பணம் கொடுத்து அழச்சொல்லி
  ஒருபணம் கொடுத்து ஓயச் சொன்னனும்.
* அழுகிற ஆணையும் சிரிக்கிற பெண்ணையும் நம்பக்கூடாது.
* அழுகிற வீட்டில் இருந்தாலும், ஒழுகிற வீட்டில் இருக்க முடியாது.
* அள்ளிக் கொடுத்தால் சும்மா! அளந்து கொடுத்தால் கடன்!
* அறுவடைக் காலத்தில் எலியண்ணுவுக்கு ஐந்து பெண்டாட்டி.
* ஆயிரம் பனையுள்ள அப்பனுக்குப் பிறந்தாலும், பல்குத்த ஈர்க்கில்லை.
* இருந்தவன் எழுவதற்குள் நின்றவன் நெடுந்தூரம்.
* இன்றைக்கு இலையறுத்தவன்; நாளைக்குக் குலையறுப்பான்!
* உடுத்தாப் புடவை பூச்சிக் கிரை.
* உண்ணுச் சொத்து மண்ணுப் போகும்.
* ஊதாரிக்குப் பொன் துரும்பு.
* உண்மை சொல்லிக் கெட்டாரும் இல்லை;
  பொய் சொல்லி வாழ்ந்தாரும் இல்லை.
* உப்பில்லாமல் தெரியும் உப்பருமை!
  அப்பனில்லாமல் தெரியும் அவனருமை!
* உறைமோர் இல்லாத வீட்டில் விலைமோர் கிடைக்குமா?
* ஊமை ஊரைக் கெடுக்கும்.
  ஆமை குளத்தைக் கெடுக்கும்.
* கடல் வற்றினுல் கருவாடு தின்னலாமென்று குடல் வற்றிச் செத்ததாம் கொக்கு.
* தான் தின்னி பிள்ளை வளர்க்காள்;
  தவிடு தின்னி கோழி வளர்க்காள்;
* நல்ல கதை நீளமில்லை.

# தஞ்சாவூர்ப் பாவை !

காரை – இறையடியான்.

தஞ்சாவூர்ப் பாவை தலையாட்டும்; – என்
தாத்தாவைப் போலத் தலையாட்டும்;
கொஞ்சும் பேச்சுக்கும் தலையாட்டும்; – சினம்
கொள்ளும் பேச்சுக்கும் தலையாட்டும்!

தூக்கமா என்பேன் தலையாட்டும்; – நோய்த்
துன்பமா என்பேன் தலையாட்டும்;
ஏக்கமா என்பேன் தலையாட்டும்; – நான்
என்ன சொன்னாலும் தலையாட்டும்.

ஓங்கி யடிப்பேன் தலையாட்டும்; – சிறு
ஓசை செய்யாமல் தலையாட்டும்;
தூங்கம்மா என்பேன் தலையாட்டும்; – கொசுத்
தொல்லையா என்பேன் தலையாட்டும்.

உண்டாயா என்பேன் தலையாட்டும்; – சோறு
உண்ணாயா என்பேன் தலையாட்டும்;
சண்டையா என்பேன் தலையாட்டும்; – உடல்
சாய்ந்து சாய்ந்தே தலையாட்டும்.

# உலகிலேயே....

– வ. ஞானப்பிரகாசம்.

நெல் விளைவில் முதலிடம் சீனா!
கோதுமை விளைவில் முதலிடம் அமெரிக்கா!
கரும்பு விளைவில் முதலிடம் இந்தியா!
சணல் விளைவில் முதலிடம் பாகித்தான்!
புகையிலை விளைவில் முதலிடம் அமெரிக்கா!
மணிலா விளைவில் முதலிடம் இந்தியா !
தீநீர்க்(Coffee)கொட்டை விளைவில் முதலிடம் பிரேசில் !
தேயிலை விளைவில் முதலிடம் இந்தியா!
தொய்வை(Rubber) விளைவில் முதலிடம் மலேசியா!
பருத்தி விளைவில் முதலிடம் அமெரிக்கா!




O சென்ற மாதப் புதிரின் விடை:

| | 3 சீப்புக் குலை | 5 சீப்புக் குலை | 10 சீப்புக் குலை | மொத்தத் சீப்பு | மொத்தக் காய். |
|---|---|---|---|---|---|
| மாறன் — | 5 | 1 | 4 | 10 | 100 |
| வழுதி — | 5 | 1 | 4 | 10 | 100 |
| பாண்டியன் — | 0 | 8 | 2 | 10 | 100 |
| மொத்தக்குலை | 10 | 10 | 10 | | |

இம் மாதப் புதிர்: 1

கதிரவன் என்பவனிடம் பத்து பதினம் (லிட்டர்) எண்ணெய் இருந்தது. நிலவன் என்பவன் கதிரவனிடம் 5 பதினம் எண்ணெய் கடனுகக் கேட்டான். கதிரவனும் அதற்கு இசைந்தான். ஆனுல் அவர்கள் இருவரிடமும் எண்ணெய் பிரிப்பதற்கு 5பதினக்குடம் இல்லை. 10 பதினக் குடத்தில் நிரம்ப எண்ணெய் உள்ளது. ஏழு பதினக் குடமும், மூன்று பதினக் குடமுந் தாம் அவர்களிடம் இருந்தன. இவற்றைக் கொண்டுதான் இருக்கின்ற எண்ணெயைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். அவர்கள் எப்படிப் பிரித்துக் கொள்வார்கள் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

இப்புதிரைப் போட்டிருக்கும் தம்பி. இ. கமர்தீன், எட்டாம்நிலை அரசினர் இடைநிலைப் பள்ளி, பேராவூருணி பட்டுக்கோட்டை வட்டம்.

புதிர். 2.

ஓர் அரசனுடைய படை இன்னேர் அரசனுடைய நாட்டுக்குள் புகுந்தது. அந்த நாட்டுக்கு 5 கோட்டைகள் இருந்தன. முதல் கோட்டையில் 3 வாயில்களும், இரண்டாம் கோட்டையில் 5-ம், 3-ஆம் கோட்டையில் 7-ம், 4-ஆம் கோட்டையில் 9-ம், 5-ஆம் கோட்டையில் 10 வாயில்களும் இருந்தன. படைமறவர்கள் ஒவ்வொரு கோட்டையிலும் உள்ள ஒவ்வொரு வாயிலிலும் சரிசமமாகப் புகுந்து சென்று அரண்மனையை அடைந்தனர் என்ருல் அந்தப் படையில் மொத்தம் எத்தனைப் பேர் இருந்தனர்?

விடைகள் அடுத்த இதழில்.



# எங்கள் விருப்பம் என்ன?

○ 'தென்மொழி'யும், 'தமிழ்ச்சிட்டும்' என்று வரும் வரும் என்று ஒவ்வொரு திங்களும் எதிர்பார்த்த வண்ணமிருக்கின்றேன். இனி என் நண்பர், உறவினர் முதலியவர்களின் திருமணம் போன்ற - விழாக்களில் அன்பளிப்புகளை வழங்குவதற்கு மாறாக, இவ்விதழ்களை ஓராண்டுக் காலத்திற்கு வரவழைத்துக் கொடுத்து விடுவது என்று முடிவு செய்துள்ளேன்.

—சே. பெ. நடராசன். செந்தமிழ்க் கல்லூரி. திருப்பனந்தாள்.

○ இக்காலத்து மாணவர்களில் சிலரைத் தவிர ஏனையோர்கள் நெல் குத்தி உண்ணாது, உமிகுத்தி வருந்துவதைப் போலவும், கறவை மாடு இருக்க மலட்டு மாட்டைக் கறந்து உளம் தளர்வதைப் போலவும், பூஞ்சோலை வழியிருக்கக் குழியில் விழுந்து சேற்றில் சிக்கித் தவிப்பதைப் போலவும், கரும்பு இருக்க இரும்பை மென்று பல்லை உடைத்துக் கொள்வதைப் போலவும், விளக்கு இருக்க மின்மினியை நாடுவதைப் போலவும் 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' இவற்றைப் படிக்காமல் தீய நூல்களை விரும்பிப் படிக்கின்றனர். இனியாவது அவ்வாறு இல்லாமல் மணவர்கள் இவைபோன்ற நல்ல நூல்களையே விரும்பிப் படிப்பார்கள் என்று வேண்டிக் கொள்ளுகின்றேன்.

- எழிலரசன். பத்தாம் நிலை. ஆ. பிரிவு. சங்கராபுரம்.

○ மாணவர்களாகிய நாம் பிற்காலத்தில் நம்மையும், நம் நாட்டையும் நம் மொழியையும், நம் இனத்தையும் முன்னேற்ற மடையச் செய்ய வேண்டுமன்றோ? இப்பொழுது நம் வாழ்க்கை பாலமில்லாத ஆற்றில் கட்டப்பெற்ற கயிற்றுமேல் நடந்து செல்வதுபோல இருக்கின்றது. அக் கயிற்றின் மேல் நடக்கும் பொழுது சிறிது தவறினாலும் ஆற்றில் விழுந்து துன்பப்படுவோம் இல்லையா? அது போல வாழ்க்கைக்குத் தேவையான அறநெறிகளில் இருந்து சிறிதும் தவறி விடாமல் நடக்க வேண்டுமன்றோ? தவறினால் துன்பத்திற் குள்ளாவோமே. எனவே என் உடன்பிறவாத தம்பி தங்கைகள் இத் துன்பத்தை நீத்து இன்பம் பெற வேண்டுமென்பதே என் விருப்பம்.

—ப. கிருட்டிணமூர்த்தி 10-ஆம் வகுப்பு, அரசு உயர்பள்ளி, புதுவை-7.

 பதிவு எண் எம்: 8151.

# மாணவர்க்கான மணி மொழிகள்

தமிழ்ச்சிட்டுகளே .

* உங்கள் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வொரு திறமையோ ஆற்றலோ மறைந்து கிடக்கின்றது. அதனை மலரச் செய்வதே வாழ்க்கை என அறிந்துகொள்ளுங்கள்.

* ஒழுக்கம் உயிரினும் மேலானது. ஒழுக்கத்தையும் கட்டுப் பாட்டையும் தவறுமல் கடைப்பிடியுங்கள்.

* நூல் நிலையங்கட்குச் சென்று சிறந்த அறிவு நூல்களையும் நல்ல செய்தித்தாள்களையும் படிப்பதை வழக்கமாகக் கொள்ளுங்கள்.

* பெரியோர்களின் வாழ்க்கைக் கதைகளைப் படித்து அவர்களைப் போல் நீங்களும் சிறந்தவர்களாக முயற்சி செய்யுங்கள்.

* நல்லுணர்வையும் பண்பாட்டையும் கெடுக்கக்கூடிய திரைப்படங்களில் வீணுக மயங்கி உங்களையே கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

* எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிருங்கள். உங்கள் மகிழ்ச்சிக்காக அவற்றுக்கு ஊறு விளைவிக்காதீர்கள்.

* பிறருக்கு உங்களால் இயன்ற அளவு நன்மை செய்தல் வேண்டும் என்பதைக் கட்டாயமாகக் கொள்ளுங்கள்.

* உங்கள் பெற்ருேரிடத்தும் பெரியோரிடத்தும் பணிவுடனும் இன்சொல்லுடனும் நடந்து கொள்ளுங்கள்.

* சோலைகளிலும் காடுகளிலும் திரிந்து இயற்கை அழகைச் சுவைப்பதிலும், இயற்கைப் பொருள்களோடு உறவாடுவதிலும் இன்பம் காணுங்கள்.

* இறுதியாக உங்கள் தாய் மொழியாகிய தமிழும், தாயகமாகிய தமிழகமும் இருவிழிகள் எனக்கொண்டு அவற்றுக்கு இயன்ற அளவு பணிபுரியங்கள்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.